DMC COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **CrLMP.No. 142 /2025, Petitioner side Witness -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பொன்னுசாமி | Caste | : | - |
| Father/ Husband Name | : | ஆனைமுத்து | Calling | : | ஹோட்டலில் வேலை |
| Village | : | புதுவேட்டக்குடி | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 64 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 04.09.2025. | | | | | |

Accused Absent.

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது சென்னையில் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். தனிப்புகார் தாக்கல் செய்த சித்ரா எனது மனைவி ஆவார். 19.02.2025 ம் தேதி காலை 8 மணியளவில் நானும் எனது மனைவியும் தோட்டத்தில் குச்சி அள்ளி போட்டுக்கொண்டிருந்தோம். அப்போது முத்துசாமி, முத்துசாமி மகன் கண்ணன், மனைவி கருப்பாயி, மருமகள்கள் தனலெட்சுமி, நதியா, முத்துசாமி மகள் மாணிக்கம் ஆகியோர் வந்தார்கள். முத்துசாமி குச்சியை எடுத்து போட்டதற்காக எனது மனைவியை மூங்கில் கட்டையால் தலையிலும் தோள்பட்டையிலும் அடித்தார்.

2. முத்துசாமி , கண்ணன் ஆகியோர் எனது மனைவியின் சேலையை உருவி எடுத்துவிட்டார்கள். என் மனைவி உட்காந்து கொண்டார். நான் கேட்டதற்கு என்னையும் அசிங்கமாக திட்டினார்கள். நதியா என்ற பெண் நீ என்ன துணியை தூக்கி இந்த இடத்தை வாங்கினாயா என்று அசிங்கமாக பேசினார். பின்னர் நான் எனது மனைவியை அழைத்து கொண்டு அரியலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். 3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். 22.02.2025 ம் தேதி குன்னம் காவல் நிலையத்தில் சென்று சித்ரா புகார் கொடுத்தார்.

3. மறுநாள் நாங்கள் போய் கேட்டதற்கு உதவி அய்வாளர் மருதமுத்து என்பவரிடம் விசாரித்தேன். அதற்கு அவர் கேஸ் பதிவு செய்தாச்சி என்று படித்து காட்டினார். நான் கொடுத்த புகார் மாதிரி இல்லையே இது வேற மாதிரி இருக்கு என்று கேட்டதற்கு நாங்கள் சேலையை உருவி

விட்டார்கள் என்று சொன்னோம். ஆனால் சேலையை இழுத்தார் என்று எழுதி உள்ளது. நாங்கள் புகாரை மாற்றி வைத்துள்ளார்கள் என்று கேட்டேன் அதற்கு அவர் நீங்கள் சொன்னதுதான் புகாராக எழுதி உள்ளோம் என்று சொன்னார். நாங்கள் மாற்றி எழுதி உள்ளீர்கள் என்று சொன்னால் அவர் பையில் நாங்கள் எழுதி கொடுத்த புகாரை எடுத்து காண்பித்து இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டார்.

4. வேறு எங்கு வேண்டுமானாலும் சென்று பார்த்துக்கொள்ளுங்கள் நான் கேசை இவ்வாறு தான் எழுதுவேன் என்று சொன்னார். மேல் நடவடிக்கைக்கா மங்களமேடு, பெரம்பலூர், திருச்சியில் ஆகிய இடங்களில் மேல் அதிகாரியிடம் புகார் கொடுத்தோம். எங்களை தாக்கியவர்கள் மீதும் SI மருதமுத்து மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.
District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC/JM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **CrLMP.No. 142 /2025, Petitioner side Witness -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாண்டியன் | Caste | : | - |
| Father/ Husband Name | : | கிருஷ்ணன் | Calling | : | விவசாயம் |
| Village | : | நல்லறிக்கை | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 50 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 04.09.2025. | | | | | |

Accused Absent.

<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை</u> :-

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். தனிப்புகாரை தாக்கல் செய்த சித்ரா வை தெரியும். அவர் எதற்காக தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். 19.02.2025 ம் வருடம் நான் சித்ராவை பார்ப்பதற்காக வேட்டக்குடிக்கு சென்றிருந்தேன். வீட்டில் ஆள் இல்லை என்றும் தோட்டத்தில் இருப்பதாக கேள்விப்பட்டு தோட்டத்திற்கு சென்றேன். நான் சென்றபோது முத்துசாமி, கண்ணன், குச்சியால் அடித்து சித்ராவின் சேலையை உருவி விட்டார்கள். பக்கத்தில் 3 பெண்கள் கருப்பாயி, மாணிக்கம், லெட்சுமி ஆகியோர் சித்ராவை எட்டி எட்டி உதைத்து கொண்டிருந்தார்கள். சித்ரா சேலை இல்லாமல் உட்காந்து கொண்டிருந்தார். இவர்களை அடித்து கொல்லுங்கடா இவர்களை கேட்பதற்கு யார் இருக்கிறா என்று கருப்பாயி சொன்னார்.

2. பின்னர் 100 க்கு நான் போன் செய்தேன். அவர்கள் நீங்கள் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுங்கள் அங்கு போலிசார் வருவார்கள் என்று சொன்னார்கள். அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். 3 நாட்கள் சிகிச்சைக்கு பிறகு குன்னம் காவல் நிலையத்தில் 22.02.2025 ம் தேதி புகார் கொடுத்தோம். அது பற்றி மறுநாள் 23.02.2025 ம் தேதி நான், சித்ரா, பொன்னுசாமி ஆகியோர் போய் கேட்டதற்கு புகார் ரெடி பண்ணியாச்சி படித்து பாருங்கள் என்று பையில் இருந்து எடுத்து காட்டினார். அது நாங்கள் கொடுத்து புகாருக்கும் பையில் இருந்து நாங்கள் கொடுத்த புகாரை எடுத்து காண்பித்து இரண்டிற்கும் என்ன வேறுபாடு என்று கேட்டார். இது நாங்கள் கொடுத்த புகார் அல்ல என்று சொன்னோம்.

DMCJM KUNNAM

அதற்கும் இதற்கும் வேறுபாடு உள்ளது என்று சொன்னதற்கு நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போய் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.
District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM